1993 பிப்ரவரி 8]

பகுதிகளில் அரசு அனுமதி பெற்ற பின்புதான் வேலையைத் துவக்க முடியுமாதலால் அரசுக்குப் பிரேரணை அனுப்பி அரசின் அனுமதி பெற்ற பின்பு வேலைகள் துவங்கப்படுகின்றன. இதற்குத் தேவைப்படும் கால அவகாசம தவிர்க்க முடியாததாகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்க அரசு அனுமதி அளித்து 4 அல்லது 5 ஆண்டுகள் ஆனபிறகும் கூட வேலைகள் துவக்கப் படாமல் உள்ளதைக் கருத்தில் கொண்டு அனுமதி அளித்தவுடன் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அனுமதி கிடைத்தவுடன் வேலைகள் மிக வேகமாகத் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

19—

தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை தொடங்குதல்.

*13827— திரு. மா. சுந்தரதாஸ்:
மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை அரசால் தொடங்கப்படுகிறதா?

(ஆ) அவ்வாறாயின் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.டி.ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

[1993 பிப்ரவரி 8

(ஆ) வ.உ. சிதம்பரனார் மாவட்டத்தில் தருவை குளத்தில் சுமார் 100 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்து 7.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு இறால் வளர்ப்பு தொழிற்பேட்டையினை அமைத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்போது தொடங்க இருக்கிறது, எப்போது வேலை முடியும் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போல பல 'வெரைட்டி ஆப் இறால்' வளர்க்கின்ற திட்டத்தை அரசு வைத்து இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை ஒரு தொழிலில் சிறந்த முதல் மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற இலட்சிய முனைப்பில், கடந்த காலங்களில் எந்த ஒரு அரசாலும் அளிக்கப் படாத பல சலுகைகளை அளித்து அதன் மூலம் தமிழகத்தில் தொழில்கள் வளர்வதற்கு அரும்பாடுபட்டு வருகிறார்கள். அந்த வகையில் இந்த இறால் வளர்ப்பைப் பொறுத்த வரையிலும் நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாக சுமார் 228 கோடி ரூபாய் அளவுக்கு இது அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. அந்த ரீதியில் இந்தத் தொழிலை உருவாக்க வேண்டும். அதன் மூலம் பல இளைஞர்கள் கடலோர மாவட்டங் களில் வேலை வாய்ப்பு பெற வேண்டும் என்பதற்காக நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியா விலேயே ஒரு சிறந்த 'இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்' ஆக 'அக்கு வாகல்சர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்'-ஐ அமைப்பதற்கு உத்தர விட்டிருக்கிறார்கள். அந்த ரீதியில் வேலைகள் மைக்ரோ லெவல் சர்வே செய்யப்பட்டு வருகின்றன. புதர்களை வெட்டு வதற்காக டெண்டர்கள் வரவேற்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்தக் கிராம மக்கள் அந்தப் புதர்களை வெட்டக் கூடாது என்பதற்காக தடையாணை பெற்றுள்ளனர். தடை யாணையைப் பொறுத்த வரையிலே நீதிமன்றத்திற்கு வெளியே கிராம மக்களிடம் பேசி தீர்வு காணப்பட்டிருக்கிறது. பணிகள் விரைவாகத் தொடங்கப்பட இருக்கினறன என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திருமதி. க. பழனியம்மாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.